O.S. No. 28/2013 நாள். 08.11.2022

PW1 – மரியசூசை

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**1.** நான் தாவா சொத்தில் மடை கட்டித் தரும்படி 5, 6 பிரதிவாதிகளிடம் தொடர்ந்து வழியுறுத்தி வந்ததாக எனது பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் அது தொடர்பான ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தில் உள்ள தூம்பில் தற்போது வரை தண்ணீர் பாய்ச்சி வருகிறோமா என்றால் மடை தொடர்பாக பிரச்சனை ஏற்பட்ட பின்பு தண்ணீர் பாய்ச்சவில்லை. தாவா சொத்து சம்பந்தமாக 1995ம் ஆண்டு சாமாதான கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் பேரில் ஏதேனும் ஆட்சேபனை தெரிவித்தோமா என்றால் சமாதான கூட்டமானது தாவா சொத்தில் உள்ள மடை தொடர்பாக நடக்கவில்லை அந்த சமாதான கூட்டத்தில் ஏற்பட்ட தீர்மனத்தின் பேரில் ஆட்சேபனை தெரிவித்து அதன் பேரில் தாசில்தார், வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் மடை கட்டி தருகிறோம் என கூறினார்கள்.

2. தாவா சொத்தில் தான் மேற்சொன்னவாறு தாசில்தார் மற்றும் வருவாய் கோட்டாட்சியர்கள் மடை கட்டி தருவதாக சொன்னார்களா என்றால் ஆமாம். தாவா சொத்தில் உள்ள தூம்பை 1 முதல் 4 பிரதிவாதிகள் ஜேசிபி மூலமாக வெட்டிவிட்டதாக பிராதில் கூறியுள்ளேன் என்றால் சரிதான் எந்த வருடம் என்றால் 2002 அல்லது 2003 இருக்கும் சரியாக நினைவு இல்லை. 2013ம் ஆண்டு வருவாய் கோட்டாட்சியரிடம் தாவா சொத்தில் மீண்டும் தூம்பு தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டதாக நாங்கள் மனு கொடுத்தோமா என்றால் கொடுத்தோம். மேலே கொடுத்த மனுவில் 1 முதல் 4 பிரதிவாதிகள் தூம்பை நீக்கி விட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் ஒரு தூம்பை நீக்கிவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

3. மேற்படி மனுவில் தூம்பை நீக்கிவிட்டதாகவும் நீக்கியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க கோரி மனு கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி மனுவிற்கு 1 முதல் 4 பிரதிவாதிகள் 5, 6 பிரதிவாதிகள் முன்னிலையில் எதிர்வாதம் செய்தார்களா என்றால் செய்தார்கள். மேலே கூறிய எதிர்வாதத்தில் என்ன எதிர்வாதம் கூறியுள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது. மேற்படி 1 முதல் 4 பிரதிவாதிகள் எதிர்வாதம் தாக்கல் செய்த பின்னரே இவ்வழக்கு நான் தாக்கல் செய்தேன் என்றால் அதற்கு முன்னரே தாக்கல் செய்துவிட்டோம் அதனால் தான் வருவாய் கோட்டாட்சியர் தீர்ப்பாயத்தில் விசாரணை மேற்கொள்ளவில்லை.

4. தாவா வழக்கிற்கு பின்பு கருங்கடி கண்மாய் சீரமைப்பு செய்ய்பபட்டுள்ளதா என்றால் பிரதம மந்திரி நிதி திட்டத்தின் கீழ் கண்மாய் சீரமைப்பு செய்யப்பட்டும், 7 மடைகள் கட்டி கொடுக்கப்பட்டு உள்ளது, தாவா சொத்தில் உள்ள மடை வழக்கு நிலுவையில் உள்ளதால் சீரமைப்பு செய்யவில்லை. மேற்கூறிய படி சீரமைப்பு செய்தபோது கண்மாயில் வெட்டிய மண்ணை டிராக்டர் மூலம் கண்மாய் கரையில் கொட்டினார்கள் என்றால் சரிதான். மேற்படி கண்மாயில் மண் வெட்டிய இடத்தில் இருந்து கண்மாய் கரைக்கு கொண்டு செல்ல தற்காலிகமாக மண்ணால் ஆன பாதை அமைத்து கொண்டார்கள் என்றால் சரிதான்.

5. அவ்வாறு தாவா சொத்திற்கு மேற்கே எடுக்கப்பட்ட மண்ணை கரைக்கு கொண்டு செல்ல தாவா சொத்திற்கு நேராக பாதை ஏற்படுத்தினார்கள் என்றால் தாவா சொத்திற்கு வடக்கு பக்கத்தில் 2 மீட்டர் தள்ளி சாலை ஏற்படுத்தினார்கள். நீதிமன்ற ஆணையர் பார்வையிடும்போது மேற்கூறிய மண் பாதை இருந்ததா என்றால் 2 மீட்டர் தள்ளி இருந்தது. பொதுவாக தூம்பு வழியே தண்ணீர் வெளியேறும் பகுதியில் மண் குவியல் ஏற்பட வாய்புள்ளது என்றால் சரிதான்.

மண்ணால் மடை கட்ட முடியாது என்றால் சரிதான். பொதுவாக தோட்டப்பயிர்களான பருத்தி, மிளகாய் உள்ளிட்ட பயிர்களுக்கு கிணற்று நீர் பாசனம் செய்வது வழக்கமா என்றால் நிலத்தடி நீர் உள்ள பகுதிகளில் அவ்வாறு பாய்ச்சிவருவார்கள் எங்கள் ஊரில் உப்பு தண்ணீர் இருப்பதால் கண்மாய் மூலமாக பாய்ச்சப்படுகிறது.

6. தாவா சொத்திற்கு கிழக்கே தொடர்ச்சியாக புஞ்சை நிலங்கள் உள்ளதா என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள தூம்பின் வெளிப்புற வாய் புஞ்சை நிலத்தை நோக்கி உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தென்புறம் உள்ள 7 மடைகளின் தூம்பானது வாய்க்காலுடன் தொடர்ச்சியாக உள்ளது என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ததற்கு நாங்கள் ஆட்சேபனை தெரிவித்தோமா என்றால் இல்லை. ஆணையர் தாக்கல் செய்யப்பட்டுள்ள வரைபடத்தில் தாவா சொத்தில் உள்ள தூம்பினை தொடர்ந்து கீழ்பகுதியில் வாய்க்கால் இருப்பதாக குறிப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

7. புஞ்சை நிலங்களில் விளையக்கூடிய தோட்டப்பயிர்களுக்கு அதிகபடியான மழை நீர் தேவைப்படாது என்றால் சரிதான். மேற்படி நிலத்தில் அதிகமான மழை நீரை வெளியேற்றுவதற்கு நாங்களே வாய்க்கால் ஏற்படுத்திக் கொள்வோம் என்றால் சரியல்ல வாய்க்கால் மூலமாக தண்ணீர் ஏற்படுத்துவதில்லை வயல் மூலமாக தண்ணீர் வெளியேற்றுவோம். வயல் மூலமாக வெளியேற்றுவது தவறு என்றும் வாய்க்கால் வெட்டிதான் வெளியேற்றுவோம் என்றால் சரியல்ல. அவ்வாறு எங்களால் ஏற்படுத்தப்பட்ட வாய்க்காலை தான் நீதிமன்ற வழக்கறிஞர் ஆணையர் வரைபடத்தில் SU என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. ஆயக்கட்டு பகுதிகளுக்கு ஒவ்வொரு வருடமும் சேதம் போடுவது வழக்கம் என்றால் சரிதான்.

8. தாவா சொத்திற்கு தெற்கே உள்ள 1வது மடையில் அருளாந்து என்பவரை கீழ் சேதம் பார்க்கவும், நாகரெத்தினம் என்பவரை மேல் சேதம் பார்க்கவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்களை சேதம் பார்த்தது 2002ம் ஆண்டு என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஆணையர் தாவா சொத்தை பார்வையிட்ட சமயம் 1 முதல் 4 பிரதிவாதிகளின் கடுமையான ஆட்சேபனையினால் தாவா சொத்தில் மடை கட்ட இயலவில்லை என்று தெரிவித்தோமா என்றால் ஆணையரிடம் தெரிவித்தோம். தாவா சொத்தில் தூம்பும், மடையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் தனிப்பட்டு அடையாளம் காண இயலாத வகையில் கண்மாய் கரையாக உள்ளது என்றால் வழக்கு காலக்கட்டத்தில் அவ்வாறு அடையாளம் காண இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

9. தாவா சொத்து அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பொய்யான ஆவணங்களை உற்பத்தி செய்து தூய்மையான கரங்களை கொண்டு நீதிமன்றத்தை அனுகவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு கிழக்கே புஞ்சை நிலங்கள் உள்ள விவரங்களை வேண்டுமென்றே இவ்வழக்கில் மறைத்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்து மூலமாக எனது முன்னோர்கள் காலம் முதல் புஞ்சை நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வந்தோம் என்று வழக்கிற்காக பொய்யாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. புஞ்சை நிலங்களுக்கு அரசு விதிகளின் படி கண்மாய் நீர்பாசனம் இல்லை என்றால் சரியல்ல, கூடுதல் வரி அளித்தால் தண்ணீர் பாச்சப்படும் மேற்படி கூடுதல் வரி ரசீது என்னிடம் உள்ளதா என்றால் வைத்துள்ளேன் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேற்படி கூடுதல் வரி கட்டவும் இல்லை அவ்வாறு தண்ணீர் பாய்ச்சவும் இல்லை வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

10. கருங்குடி கண்மாயில் 7 மடைகள் தான் உள்ளது 8 மடைகள் என வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து தண்ணீர் பாய்ச்சும் வழக்காறு உரிமை ஏதும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் நாங்கள் புதிதாக தூம்பு அமைப்பதற்கு கரையை வெட்டினோம் என்றும், அதை 1 முதல் 4 பிரதிவாதிகள் தடுத்தனர் என்றும், அது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டு கிராம நிர்வாக அலுவலர் காவல் துறையில் புகார் அளித்தார் என்றால் சரியல்ல. மேற்சொன்னவாறு நாங்கள் தூம்பு அமைப்பதற்கு முயற்சித்தோம் என்றும் அதை 1 முதல் 4 பிரதிவாதிகள் தடுக்கும் போது கிராம நிர்வாக அலுவலர் தான் எங்களை வெட்ட சொன்னார் என்று கூறினோம் என்றும், அது குறித்து 1 முதல் 4 பிரதிவாதிகள் கிராம நிர்வாக அலுவலரை கேட்டபோது கிராம நிர்வாக அலுவலர் எங்களுக்கு சாதகமாக பொய் புகாரை கொடுத்தார் என்றால் சரியல்ல.